சிவமயம்



# அமரர்
# கோணாமலை சத்தியசீலராஜா
## அவர்களின்
# 1ம் ஆண்டு நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அமரர்

# கோணாமலை சத்தியசீலராஜா

அவர்களின்

(முன்னாள் துறைமுக அதிகார சபை உதவி முகாமையாளர்,
முன்னாள் நகரசபை உறுப்பினர், விக்டர் ஏஜென்சி
உரிமையாளர், அகில இலங்கை சமாதான நீதிவான்)

இறைபதப்பேறு குறித்த

# 1ம் ஆண்டு

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1ம் ஆண்டு நினைவு மலர்



வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்

மண்ணில்
16.12.1939

விண்ணில்
31.08.2021

# அமரர்

# கோணாமலை சத்தியசீலராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்போடு எமையெல்லாம்
அரவணைத்து வாழ வைத்து
இனிதென வாழ வழிகள் பல
இன்முகத்தோடு எமக்குக் காட்டி
மண்ணுலக வாழ்க்கை போதுமென்று
விண்ணுலகு சிறக்கச் சென்று விட்ட
தந்தையின் பாதங்களிலே
இக் காவிய மலரைச்
சமர்ப்பணம் செய்கின்றோம்.

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்ச புராணம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்றுமா முகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவோம்.

## தேவாரம்

என்ன புண்ணியஞ் செய்தனை
    நெஞ்சமே யிருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப்
    பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு
    வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும்
    பாடியும் வழிபடும் அதனாலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால் நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங் கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே! உவப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரமன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புராணம்

உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

# திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடும்முகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசும்முகம் ஒன்றே
கூறும்அடி யார்கள்வினை தீர்க்கும்முகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரைவ தைத்தமுகம் ஒன்றே
வள்ளியைம ணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீ அருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்த்தபெரு மாளே.

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான் மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைச் சரித்திரம்

யாழ்மாவட்டத்தில் உள்ள பருத்தித்துறை என்னும் ஊரில் 1939 இல் கோணாமலை வள்ளிப்பிள்ளை தம்பதியர்க்கு மகனாகப் பிறந்தார். செல்வம் நிறைந்த கல்வியைப் பெற்றுக் கொடுப்பதற்காக, பருத்தித்துறை வேலாயுதம் வித்தியாலயத்தில் சேர்ந்து வைத்தனர். இளமையில் துடுக்கத்தனமும், சிந்தனையும் கொண்ட இவர் கல்வியிலே சிறப்பாகக் கரிசனை காட்டி வந்தார்.

தனது ஆரம்பக்கல்வியைச் சிறப்பாக முடித்துக் கொண்ட இவர் உயர்கல்விக்காக அன்றும் இன்றும் பிரபலமாக விளங்கி வரும் "ஹாட்லிக் கல்லூரியில்" சேர்ந்து உயர்தரம் கற்கலானார். கல்வியில் நாட்டம் கொண்டு மும்மொழிப் புலமையினையும் சிறப்பாகப் பெற்றுக் கொண்டார். கல்வியில் மட்டுமல்லாமல் விளையாட்டிலும் அதிக ஆர்வம் கொண்டிருந்தார். 1963 இல் முதன்முதலாக திருகோணமலை (கப்பல் கம்பனி) துறைமுக அதிகார சபையில் எழுதுனராக இணைந்து கொண்டார்.

தொழிலில் பக்தியும், ஆர்வமும் கொண்டு உழைத்தார். துள்ளிவரும் காளைப் பருவம் அடைந்தார். பெற்றோர்களும், உறவுகளும் இணைந்து திருமணம் செய்து வைக்க சிந்தம் கொண்டனர். இதன் பயனாக, பருத்தித்துறையைச் சேர்த்த உறவுப் பெண்ணான சின்னத்துரை - நல்லம்மா தம்பதியரின் செல்வமகளான செல்வதியம்மா என்பவரை 1964இல் திருமணம் செய்து வைத்தனர். இல்லற வாழ்வு இனிதாக அமைய இரு ஆண்குழந்தைகளையும், நான்கு பெண் குழந்தைகளையும் மக்களாகப் பெற்றே மனம் மகிழ்ந்தார்.

சிறந்த சேவையின் பயனாக துறைமுக அதிகார சபையில் " உதவி முகாமையாளர்" பதவியுயர்வு பெற்று சீரிய பணி செய்தார். தந்தை செல்வா மீது அதிக பற்றுக் கொண்டு தமிழரசிக் கட்சியில் சேர்ந்தார். 1975ம் ஆண்டு காலப்பகுதியில் உவர்மலைப் பகுதியில் திருகோணமலை மக்கள் குடியேற முற்பட்டனர். இவ்வேளையில் உவர்மலை குடியேற்றவாசிகளில் ஆரம்ப கால குடியிருப்பாளர்களில் ஒருவராக தன்னையும் இணைத்துக் கொண்டார். தனது உழைப்பிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய வீட்டினை அமைத்து, மனைவியோடு உவர்மலையை வாழ்விடமாகக் கொண்டு மகிழ்ச்சிகரமாக இல்லற வாழ்வை இனிதாக அமைத்துக் கொண்டார்.

உவர்மலைப் பிரதேச மக்களின் பல தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்க முன்னின்று அயராது பாடுபட்டார். 1977 ஆம் ஆண்டு உவர்மலை சன - சமூக நிலையத்தின் தலைவராகவும், ஞான வைரவர் ஆலயத்தின் ஆரம்ப கால உறுப்பினரானவும், 1990ம் ஆண்டு உவர்மலை கண்ணகி அம்மன் ஆலயத்தின் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டு சைவத் தொண்டாற்றினார்.

திருகோணமலையின் பிரபல விளையாட்டுக் கழகமாக விளங்கிய " சைனிங்ஸ்ரார்" விளையாட்டுக் கழகத்தின் தலைவராகவும் இருந்து கரப்பந்தாட்ட விளையாட்டினை ஊக்குவித்ததோடு, அகில இலங்கை ரீதியில் வெற்றி வாகை சூடிக் கொள்ள அயராதுழைத்தார்.

இன்று தேசிய பாடசாலையாக விளங்கும் உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி உருவாக்கத்தில் கடுமையான முயற்சி செய்தவர்களில் இவரையும் குறிப்பிட்டுச் சொல்லலாம். நீண்ட காலமாக இக்கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளராகப் பணியாற்றி பாடசாலையின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுத்தார். தனது மருமகனான அமரர் காளிராஜா அவர்களின் நினைவாக கல்லூரியின் முகப்பு வாயிலை அமைத்துக் கொடுத்தார்.

இலங்கை தமிழரசிக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினராக விளங்கியதோடு, மாவட்டத்தின் பொருளாளர், தொகுதித் தலைவர், உவர்மலைக்கிளைத் தலைவர், மத்திய குழு உறுப்பினர் போன்ற பதவிகள் தன்னகத்தே கொண்டு கட்சிக்காக அரும்பாடுபட்டார். திருகோணமலை நகரசபையின் முன்னாள் உறுப்பினராகவும் விளங்கி பல பணிகளை ஆற்றினார்.

அகில இலங்கை சமாதான நீதிவானாகவும் இருந்து சமூகப்பணிப் பணியாற்றியானர். காலமும், நேரமும் விரைவாக மறைந்து போக, நோயுற்ற நிலையில் தனது 82வது வயதில் 2021.08.31 அன்று மண்ணுலக வாழ்வை முடித்து விண்ணுலகம் சென்றார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்முகத்தை எங்கே காண்பேன்........

கணவனாய்க் கொண்ட நாள் முதல்
குறையேதும் காணவில்லை ஐயா
தனியாய்த் தவிக்கவிட்டு சென்றதேனோ,
ஆசை முகம் காணாது துடிக்கிறேன் ஐயா
மண்ணுலக வாழ்வு போதுமென்றே
விண்ணுலகம் சென்று மறைந்ததேனோ
நிரந்தரமாய் எமைப் பிரிந்து செல்ல
கனவிலும் நான் நினைக்கவில்லையே!
அன்பும் நிறைந்த வழிகாட்டல்களும்
என்றுமே குறையாத செல்வமும்
கடவுளின் மீதில் மாறாத பக்தியும்
வாழும்வரை நீங்காமல் கொண்டிருந்தீர்
பிறப்பு என்பது மெய்யானால் வந்தே
துணைவனாய் மாறிப் பிறந்திடுவாய் ஐயா,
வாழும், காலம் முழுவதுமாய் நினைத்தே
கண்ணீர்த் துளிகளோடு காத்திருப்பேன்.

**அன்பு மனைவி**
**செல்வதியம்மா**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலங்கரை விளக்கம் நீங்கள்......

பெற்ற கடன் தீரமுன்னே !
விரைவாய் மறைந்ததேனோ !
அன்பும் நிறைவான கண்டிப்பும்
வாக்கினிலே சீரிய தெளிவும்
துன்பம் வரும் போதெல்லாம்
கலங்கரை விளக்கமாய் நீங்கள்
உடனிருந்தே ஆறுதல் தந்தீர்
தந்தையாய் வர பாக்கியம் செய்தோம்.
கண் இமைக்கும் நேரம் முடிவதற்குள்
தீயிலே கலந்து போனதெங்கே.

அன்பு மகன்மார்
**ச.ரூபராஜா, ச.ராஜ்குமார்**

# மறக்க முடியவில்லையே ஐயா!

தந்தையாய் நல்ல கல்வி தந்தே
பண்பும் பாசமும் காட்டி நின்றீர்
தேவையறிந்து வாழ்வு தந்தீர்
காற்றில் கலந்து மறைந்ததேனோ !
மக்களுக்காய் நல்ல வாழ்வு தந்தே
இல்லங்கள் அமைத்து சிறப்பித்தீர்
கேட்டவற்றைக் குறையாமல் தந்தீர்
துணையிழந்த நேரம் கரம் தந்தீர்
நட்ட நடு நிசியில் பிரிந்து சென்றதேனோ !
மறக்க முடியவில்லை தந்தையே!
கண்ணீராய் தினமும் கரைகிறோம் ஐயா
இறைபதம் அடையவே துதிக்கின்றோம்.

அன்பு மகள்மார்,
**செல்வரஞ்சினி, செல்வஜெயந்தினி**
**செல்வநந்தினி, செல்வநளினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறந்திடுமா உள்ளம் ....

உலகில் உயர்ந்த உறவே
தோளில் சுமந்த உயிரே தந்தையே
விழிகளில் பாசம் காட்டி
நேர்மையை செயலில் காட்டி
கடமையில் சிறிதும் தவறாமல்
கண்ணியமாய் குடும்பத்தை
வழி நடத்திச் சென்றாயே ஐயா ....

எம்மை வளர வைத்து
வாழ வைத்த தெய்வம் -நீ
வேதனைகள் பலதாங்கியும்
சாதனைகளை கடந்து
சந்தோஷத்தை மட்டும் இறைவனின்
துணையுடன் பகிர்ந்தளித்தாய் -ஐயா

கொரோனா என்ற கொடிய நோய்
உன்னை ஆட்கொள்ளா விடின் .... இன்னும்
சிறிது காலம் எம்முடன் வாழ்ந்திருப்பீரே.. ஐயா

மண்ணை விட்டு விண்ணுலகம் சென்றாலும்
எம்முடன் வாழ்ந்து மறைந்தாலும்
எம் நினைவில் என்றுமே மாறாது - ஐயா
உமது நினைவலைகள்....

அன்பு மகள்
**திருமதி. நளினி சுரேஷ் குமரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்முகத்தை எங்கே காண்பேன்......

தந்தையாய் என்றும் நினைத்திருந்தோம்
சொல்லாமல் மறைந்த சேதியென்ன
காற்றிலே கலந்து வந்த பிரிவுச் செய்தி
கண்களை குளமாக்கி விட்டதே

அன்பான வார்த்தை அழகான உரையாடல்
கணப்பொழுதில் மறைந்து போனதே
மருமக்கள்கள் மீதில் கொள்ளை ஆசை
நிலை குலைந்து நிற்கின்றோம் மாமா....

இறைவன் திருவடி இனிதாய்த் சேர்ந்திட
அனுதினமும் பிரார்த்தனை செய்கின்றோம்.

அன்பு மருமகன்மார்,
சாந்தலிங்கம், சுரேஷ்குமரன்

## காலன் கொடியவனே......

மருமகளாய் நினைக்காமல் நாளும்
மகளாகவே எண்ணி அன்பு காட்டினீர்
இரக்கமில்லா காலன் கொடியவனே
செய்வதறியாது கலங்கி நிற்கின்றேன்
நிமிர்ந்த தோற்றமும் மெல்லிய புன்னகையும்
பரிவு காட்டி நிற்கும் பனிமனமும்
நினைக்க வைத்தே வதைக்குதே மாமா
இறைவன் தாள் அடைந்திட வேண்டுகிறேன்.

அன்பு மருமகள்
ரெஜிந்தினி ராஜ்குமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கு சென்றீர் ஐயா.....

என்றும் குறையாத அன்பு கொண்டீர்
அன்பான கண்டிப்பும் கருணையும் தந்தீர்
தந்தையை இழந்து நின்ற போதில்
தோள் கொடுத்தே எமைக் காத்தீர்
குடும்பத்தின் பெருநிழலாய் ஆறுதல் தந்தீர்
ஊர் கூடியே துயர் பகிர காலனவன்
எமக்காக காலம் வழங்கவில்லையே
தேசம் கடந்து நாம் சென்றாலும்
பாசம் ஒருபோதும் குறையவில்லையே
எங்கு சென்ற போதும் உங்கள் ஆத்மா
சாந்தியடைய காத்திருப்போம் நாமே
கூடித் துயர் பகிர்ந்து நினைக்கின்றோம் ஐயா

**அன்பின் பேரப்பிள்ளைகள்**
**ஜெனோஷன், கார்த்திகா, சஜீவன், லக்ஷிகா,**
**மதுபாஷணன், மிருஷிதா, டனுஷிதா, புவியரசன்,**
**சுகந்தி, சந்தோஷ், சஞ்ஜித், பிரதீஷா,**
**தனுஷ்ஹரன், ரெக்சிக்கா, ரெக்சன், ரிஷி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவு கொடியதே.....

ஆசையாய் எமையணைத்தே
அன்பு முத்தம் தந்தே மகிழ்வாய்
குறும்புகள் செய்வது கண்டால்
அகமகிழ்ந்து சிறு புன்னகை செய்வாய்
பனிபடர் தேசத்தில் வந்த எம்மை
பூவாய்ச் சுமந்தே அன்பு செய்வாய்
தேசமெல்லாம் தேடி நிற்கின்றோம்
சாமியிடம் சென்றதாய் கூறுகிறார்
சீக்கிரமாய் மீண்டு வந்திடுவாயோ
பிரிவுக் கொடுமை வாட்டிவதைக்குதே

**அன்பின் பூட்டப்பிள்ளைகள்**
**சர்விகா, சஷ்டிக்கா,**
**சர்விஷ், நிர்த்தீஷ்**

# கண்ணீர் பூக்களினால் காணிக்கை

அமைதியின் உருவமாகவும்
அடக்கத்தின் இருப்பிடமாகவும்
பண்பின் பெருந்தகையாகவும்
எம் மத்தியில் அன்பு ஒளியாக
இருந்த உத்தமரே! எங்கள் ஐயா

ஈகை பல செய்து எல்லோருக்கும்
நல்லவராய் நாணயமாய் நடந்தீர்
ஏனோ கொரோனா என்ற
கொடிய நோய் உங்களை
பறித்து விட்டான்- எம்மிடமிருந்து

அமைதியாக துயிலும் தங்கள் ஆன்மா
இறைபதம் சேர இறைவனை
இறைஞ்சுகிறோம்

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**

**பெறா மக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவு தொலைந்து போனதே.....

ஆலம் விழுதுகள் போல் எமைத்தாங்கி
அன்புகாட்டி உதவி செய்தாய்
சிறு சிறு சஞ்சலங்கள் உடலில் வந்தாலும்
தாங்கிய படியே சிரித்து நிற்பாய்
காலன் வந்து பறித்துச் செல்லும் வரை
கருமம் செய்தே உரையாடிச் சென்றீர்
கண்ணில்லாத இமயராசன் விரைவாய்
பறித்துச் சென்ற மாயமென்ன?

**உற்றார், உறவினர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

පාර්ලිමේන්තුව
*பாராளுமன்றம்*
**PARLIAMENT**

உவர்மலை அமரர் திரு. கோணாமலை சத்தியசீலராஜா அவர்களின் மறைவு குறித்து திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவரும், இலங்கை பாராளுமன்ற முன்னாள் எதிர்கட்சித் தலைவருமான கௌரவ இரா சம்பந்தன் அவர்கள் வழங்கிய இரங்கல் செய்தி

திருகோணமலை உவர்மலை திருவாளர் திரு. கோணாமலை சத்தியசீலராஜா அவர்கள் 31.08.2021 திகதியன்று அமரத்துவம் அடைந்தார் என்ற செய்தி அறிந்து மிகுந்த மனத்துயரம் அடைந்த நான் அவருக்கான இந்த இரங்கல் செய்தியை வழங்குவதனுடாக அவருக்கும் எனக்குமிடையிலிருந்த அன்பான மற்றும் அரசியல் ரீதியான இறுக்கமான தொடர்புகளை மீண்டுமொரு முறை நினைவு கூருகின்றேன்.

திரு. கோணாமலை சத்தியசீலராஜா அவர்கள் 1939 ம் ஆண்டு யாழ்ப்பாணம் பருத்தித்துறையில் பிறந்து இருந்தாலும் 1963 ம் ஆண்டு முதல் திருகோணமலை மண்ணில் வாழிடமாக ஆக்கி கொண்டு இடம்பெயர்வுகளுக்கும் உள்ளாகிய பின்பும் தனது இறுதி முச்சு வரை திருமலை மண்ணில் வாழ்ந்தார். 1963 முதல் என்னுடன் நட்புறவு கொண்ட அவர் எனது அரசியல் பயணத்துடன் இறுதிவரை இணைந்தே பயனித்தவர் என்ற வகையில் அவரது மறைவு எனது மனதை மிகவும் பாதித்த நிகழ்வாக இருந்தது. 1961 இல் இலங்கை தமிழரசுக் கட்சியின் உறுப்புரிமையைப் பெற்றுக் கொண்ட பின்பு கட்சியின் செயற்பாடுகள், சாத்வீக ஜனநாயக வழி போராட்டங்கள் அனைத்திலும் ஆர்வத்துடனும் உள்ளார்ந்த உறுதிபாட்டுடனும், உற்சாகத்துடனும் தனது பிரதேச மக்களையும் ஒன்றினைத்து கலந்து கொண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக கூறுவதானால் நகரசபை, மாகாணசபை. பாராளுமன்ற தேர்தல் காலப்பகுதியில் பிரசாரப் பணிகளிலும் உற்சாகமாக செயற்பட்டு தமிழரசுக் கட்சியின் வெற்றிக்காக இரவு பகல் பாராது அயராது பாடுபட்ட ஒருவர் ஆவார்.

சிறந்த ஆளுமை மிக்க அமரர் திரு. கோணமலை சத்தியசீலராஜா 1963 இலங்கைத் துறைமுக அதிகார சபையில் இணைந்து கொண்ட அவர்கள் இறுதிக் காலப்பகுதியில் உதவி முகாமையாளராக கடமையாற்றி 1999 இல் ஓய்வு பெற்றுக் கொண்டார். அவர் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினராகவும், திருகோணமலை தொகுதித் தலைவராகவும். நகரசபை உறுப்பினராகவும் ( 2011 - 2015) மாவட்டக் கிளையின் பொருளாளராகவும் ( 2014 - 2018 ) உவர்மலை வட்டாரக் கிளைத் தலைவராகவும் பதவிகளைப் பெற்று மக்களுக்கும், திருமலை மண்ணுக்கும் பெரும் சேவையாற்றி தன்னால் முடிந்த உச்சப்பணியாற்றியது மட்டுமல்ல தமிழ் அரசுகட்சித் தலைமைகளுக்கும், எனக்கும் மிகுந்த விசுவாசத்துடனும் உள்ளன்புடனும் செயற்பட்டு எமது மண் மீதும் மக்கள் மீதும் தாய்த் தமிழ் மீதும் அதீத பற்றுடனும் அர்ப்பணிப்புடனும் தனது இறுதிக் காலம் வரை பங்களிப்புச் செய்திருந்தார். அவரின் மறைவு எனக்கும் எமது திருகோணமலை மாவட்ட மக்களுக்கும் பாரிய இழப்பாகும்.

அன்னாரின் இழப்பினால் துயரடைந்துள்ள அன்னாரின் மனைவி, பிள்ளைகள், குடும்ப உறவினர்களுக்கும் உவர்மலை வாழ் மக்களுக்கும், அவரை நேசித்த அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களையும் இரங்கல்களையும் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா அமைதி பெறவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

இரா.சம்பந்தன்

திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும்

தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவரும்,

இலங்கைப் பாராளுமன்ற முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தமிழரசுக் கட்சி
ILANKAI TAMIL ARASU KADCHI

இ. த. அ. க. தலைமை அலுவலகம்:
16 (30), மாட்டின் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

ITAK HEAD OFFICE
16 (30), Martyn Road,
Jaffna, Sri Lanka.

03.02.2022

திருமதி.கோ.சத்தியசீலராசா அவர்கள்
உவர்மலை,
திருகோணமலை.

அன்புடையீர்,

**அனுதாபத் தீர்மானம்**

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் 30.01.2022 ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் நடைபெற்றது. அப்போது தங்கள் கணவர் அமரர் கோ.சத்தியசீலராசா அவர்களின் இறப்புத் தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அத்துடன் சபை இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் தங்களுக்கும் தங்கள் குடும்பத்தாருக்கும் அனுதாபம் தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்பதை தயவுடன் அறியத்தருகிறேன்.

(சு.சேவியர் குலநாயகம்)
நிர்வாகச் செயலாளர்
இ.த.அ.கட்சி

President:
Mavai. S. Senathirajah
Mobile: +94 77 7373377

Office:
T.P.: +94 21 221 7227, +94 21 224 1861
Fax: +94 11 277 8470, +94 11 221 5731



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமகன் அமரர் கோணமாலை சத்தியசீலராஜா

அமரர் கோணாமலை சத்தியசீலராஜா அவர்கள் எம்மை விட்டு பிரிந்து ஒரு வருட காலம் ஓடிவிட்டது. திருக்கோணமலை நகரத்திலும் உவர்மலை பிரதேசத்திலும் மற்றவர்களால் மதிக்கப்பட்ட நிலையில் வாழ்ந்த ஒரு பாண்பாளன் இன்று எம்மத்தியில் இல்லை. சில நல்ல மனிதர்களின் மறைவும் பிரிவும் சமூகத்தில் சில வெற்றிடங்களை ஏற்படுத்தி விடுவதுண்டு.

அமரர் சத்தியசீலராஜா அவர்கள் எனது நெருங்கிய அயலவராகவும், குடும்ப நண்பராகவும் இருந்தார். கொரோனா என்ற கொடிய ஆட்கொல்லி நோய் அவரையும் காவு கொண்டு விட்டதை அறிந்து ஓடிப்போய் அவரது உடலத்தை சில நிமிடங்கள் தான் பார்க்க முடிந்தது. அரச சுகாதார நடைமுறைகளின் பிரகாரம் உடலத்தை சுகாதாரப் பகுதியினர் எடுத்து சென்றனர். அன்னாரது இறுதிக் கிரியைகளை நேர்த்தியாகச் செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலையில் அவரது குடும்பத்தினர் இருந்தனர். நல்லவர்களையும், வல்லவர்களையும் இந்த கொரோனா என்று அரக்கன் காவு கொண்டு அழித்துக் கொண்டிருக்கின்றானே என்று கவலைப்படுவதைத் தவிர வேறொன்றையும் செய்ய முடியவில்லை.

அமரர் சத்தியசீலராஜா அவர்கள் வடக்கில் பிறந்தவராயினும் வாழ்ந்து வளம்பெற்ற ஊர் திருக்கோமைமலை தான். 1939ம் ஆண்டில் பருத்தித்துறையில் பிறந்த அன்னார் தனது கல்வியை பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்திலும், ஹாட்லிக் கல்லூரியிலும் முடித்துக்கொண்டு துறைமுகத்தில் வேலை செய்வதற்காக 1963ம் ஆண்டில் திருக்கோணமலைக்கு வந்து சேர்ந்தார் .

வீரவாகு கப்பல் கம்பனியில் ஒரு எழுதுவினைஞராக தொழிலில் சேர்ந்த அமரர் சத்தியசீலராஜா அவர்கள் தனது உழைப்பினாலும், முயற்சியினாலும் படிப்படியாக உயர் பதவி நிலைகளுக்கு முன்னேறினார். உதவி அத்தியட்சகர், பின்னர் அத்தியட்சகர் என உயர்வுகள் பெற்று 1999ம் ஆண்டில் ஓய்வு பெறும் போது இலங்கைத் துறைமுக அதிகார சபையின் உதவி முகாமையாளராக பதவி வகித்திருந்தார். அவரது நேர்மையும், உண்மையான உழைப்பும் உயர் பதவிகளுக்கு அவரை இட்டுச் சென்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் அவர்கள் அரசியலிலும் ஈடுபாடு கொண்டவராக இருந்தார். இவர் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நீண்ட கால அங்கத்தவராவார். கட்சியின் உவர்மலை வட்டாரக் கிளையின் தலைவராக பல தடவைகள் செயலாற்றியிருந்தார். கட்சியின் திருக்கோணமலைத் தொகுதிக்கிளையின் தலைவராகவும், மாவட்டக் கிளையின் பொருளாளராகவும் செயற்பட்டார். கட்சியின் மத்திய செயற்குழுவிலும் அங்கம் வகித்திருந்தார். 2014- 2018 காலப் பகுதியில் கட்சியின் மாவட்டக் கிளையின் தலைவராக நான் பணியாற்றிய வேளையில் அமரர் சத்தியசீலராஜா அவர்கள் பொருளாளராகப் பணியாற்றினார். நிதியைக் கையாளுகின்ற விடயங்களில் அவர் மிகுந்த நிதானத்துடனும், பொறுப்புணர்வுடனும் செயற்பட்டதை நான் அறிவேன். அவ்வாறு செயற்பட்டதன் காரணத்தினால் தான் எமக்குப் பின்வந்த மாவட்டக் கிளையின் நிர்வாகத்தினருக்கு பதினேழு இலட்சம் ரூபாவிற்கு மேற்பட்ட நிதியை கையளிக்கக் கூடியதாக இருந்தது.

2011-2015 ம் ஆண்டு காலப்பகுதியில் திருக்கோணமலை நகரசபையின் உறுப்பினராகவும் கடமையாற்றினார். உவர்மலை பிரதேச மக்களுக்கு நகரசபை மூலமாக தன்னால் முடியுமான சேவைகளை ஆற்றியிருந்தார். சமூக நிறுவனங்களில் இணைந்திருந்தும் பல பணிகளை ஆற்றியுள்ளார். உவர்மலை இராஜவரோதயம் சனசமூக நிலையம், கண்ணகி அம்மன் ஆலய பரிபாலன சபை என்பவற்றில் பல தடவைகள் தலைவராக இருந்து பணி செய்துள்ளார் .

ஆர்ப்பாட்டம் எதுவும் இல்லாது அமைதியாக வாழ்ந்து அடக்கமாக பல பணிகளைச் செய்த ஒரு பெருமகனாகத்தான் அமரர் சத்தியசீலராஜா அவர்களை நான் பார்க்கின்றேன். ஒரு நல்ல குடும்ப நண்பரை, அயலவரை இழந்துவிட்டோம் என்ற ஆதங்கம் எனக்குள் உண்டு. அன்னார் மறைந்து ஒரு வருடம் ஆகிவிட்டாலும் அவரது பிரிவால் வாடுகின்ற குடும்பத்தினருக்கு எனது ஆறுதலைத் தெரிவிக்கின்றேன். வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.

**சி.தண்டாயுதபாணி**
**முன்னாள் கல்வி அமைச்சர்**
**கிழக்கு மாகாணம்**
**திருக்கோணமலை,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக மேம்பாட்டு செயற்பாட்டாளர் அமரர் திரு.சத்தியசீலராஜா அவர்கள்

திருகோணமலை உவர்மலைப் பகுதி இன்றைய வளர்ச்சிக்கும் வனப்புக்கும் காரணகர்த்தாவாக இருந்தவர்களுள் மிக முக்கியமானதாக திகழ்ந்தவர். உவர்மலை விவேகானந்தா கல்லூரி உருவாக்கம் ,சமூக, அரசியல் மேம்பாடு முதலான பல விடயங்களில் முன்னணி மேம்பாட்டாளராக திகழ்ந்து மக்கள் பணியாற்றியவர் உயர் திரு.சத்தியசீலராசா அவர்கள்.

1970களின் முன் உவர்மலை பிரதேசம் சனத்தொகை குறைவான வீதி போக்குவரத்தற்ற இன்றைய வளம்இல்லாத பிரதேசமாக திகழ்ந்தது. திரு.சத்தியசீலராசா அவர்களினதும் பாரிய முயற்சியினால் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு 1978ல் திரு.இரா.சம்பந்தன்(பா.உ) அவர்களால் இன்றைய தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரிக்கு அடிக்கல் நடப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது. இப்பிரதேசத்தின் பல்துறை வளர்ச்சிக்கும் பங்காளியாக செயற்பட்டு வளர்ச்சியின் உச்ச பயனை கண்டவர். உவர்மலை விவேகானந்தா கல்லூரியின் காணி கட்டடங்கள் ஏனைய உள்கட்டுமாண பணிகள் அனைத்திற்கும் திரு. இரா.சம்பந்தன் (பா.உ), திரு.அ.தங்கதுரை(பா.உ), திரு.மாவை.சேனாதிராஜா (பா.உ) முதலானோரின் பங்களிப்புடனான கட்டடங்ளுடன் திணைக்களங்களின் உதவியைப் பெறுவதற்கும் நீண்டகாலமாக பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளராக இருந்து பணியாற்றினார். தற்போது இப் பாடசாலையின் நுழைவாயில் முகப்பு தனது மருமகன் திரு.சி.காளிராசா பிரதி அதிபராய் இங்கு கடமையாற்றும் போது அகாலமரணமானதின் நினைவாக பாரிய செலவில் அழகாக நிர்மாணித்துக்கொடுத்துள்ளார்.

மக்களின் நலனோம்பல் வழிப்படுத்தலில், அரசியலில், இலங்கை தமிழரசுக்கட்சியுடன் இணைந்து திரு.இரா.சம்பந்தன் அவர்களின் வலதுகரமாக திகழ்ந்து பணியாற்றினார். திருகோணமலை மாவட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ.த.அ கட்சியின் பொருளாளராகவும் , மக்களால் தெரிவு செய்யப்பட்ட நகரசபை உறுப்பினராகி சிறப்பாக பணியாற்றி மக்கள் நன்மதிப்பை பெற்றவர்.

2008-2012 ம் ஆண்டுகளில் தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரியின் பா.அ.சங்க உபதலைவராக இருந்து பல தொழிலதிபரான (Shipping Corporation) வர் மக்களுக்கான வேலைவாய்ப்புகள் பொருளாதார மேம்பாட்டுக்கான உதவிகளையும் வழங்கிவந்த மிகவும் நேர்மை, உண்மை, உழைப்பு என உயர்ந்த மனித நேய பண்பாளராக திகழ்ந்தவர். அனைவர் மனங்களிலும் சிறந்த தலைமைத்துவமுடைய தலைவர் என மதிக்கப்பட்ட மாமனிதர். கொரோனாவினுடைய (Covid19) கொடிய தொற்றால் அகாலமரணம் அடைய நேர்ந்தமை இன்றும் மறக்க முடியாத சோகத்தில் நாம்... அண்மையில் திருகோணமலை மாவட்ட த.அ.கட்சியினரால் நினைவு இரங்கல் நிகழ்வு நடாத்தப்பட்டது. அனைத்து த.அ.கட்சியின் தலைவர்கள் பா.உ கலந்து சிறப்பான இரங்கலுரையாற்றினர். இன்றும் அன்னார் புகழுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கிறேன்.

ஆறுமுகம் செல்வநாயகம்
முன்னாள் அதிபர்,
தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி
ஓய்வு நிலை பி.க. பணிப்பாளர்
தி/பள்ளிக்குடியிருப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
28.07.2022

# தமிழரசு விடுதலைக்குத் தன்னை அர்ப்பணித்த சத்தியசீலராசா

திருகோணமலை சத்தியசீலராசா சென்ற ஆண்டு 31 ஆவணியில் உயிர்நீத்தார் எனும் செய்தி அனைவரையும் துயரத்தில் ஆழ்த்திவிட்டது. அவருக்கு வந்த நோய் கொரோனா எனும் கொடிய தொற்று என்று சந்தேகம் எழுந்த பொழுது உறவுகள் கூட இறுதி நிகழ்வில் பங்குகொள்ள முடியுமா? என்ற நிலை இன்னும் பரிதாப நிலையை ஏற்படுத்தி விட்டது. அன்னார் இலங்கை வடபகுதியில் யாழ்ப்பாணம் பருத்தித்துறையில் 1939ல் பிறந்தார். தொழில் முயற்சியின் பொருட்டு 1974ல் திருகோணமலையில் உவர் மலையில் குடும்பத்துடன் குடியேறி வாழ்க்கையைத் தொடங்கினார். திருகோணமலை துறைமுக அதிகாரசபையில் 1963ல் எழுதுவினைஞராய்த் தொழிலை ஆரம்பித்தார். துறைமுக அதிகாரசபையில் தான் வகித்த தொழிலில் பதவி உயர்வு பெற்று இறுதிக்காலத்தில் உதவி முகாமையாளராக விளங்கினார்.

தமிழரசுக் கட்சியின் சார்பில் திருகோணமலை துறைமுக அதிகாரசபையின் தொழிலாளர் தொழிற்சங்கத்தை உருவாக்குவதிலும் வழிநடத்துவதிலும் தொழிலாளர் நல உரிமைகளுக்கான போராட்டங்களிலும் முன்னின்று உழைத்தவர். அதே காலத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வளர்ச்சியிலும் தொழிற்சங்க வளர்ச்சியிலும் முன்னின்று உழைத்தவர்கள் வீரசுப்பிரமணியம், ஈழத்துநாதன், சத்தியசீலராசா, சிறீஸ்கந்தராசா அத்துடன் அரசுத்துறையில் இருந்த அரச நிர்வாகப் பொறுப்பிலிருந்த மாணிக்க சபாபதி முதலான எண்ணற்றவர்களை நினைவுகூர வேண்டும்.

அதேகாலத்தில் 1965 காலப்பகுதியில் இலங்கைத் திருகோணமலையில் ஆகாயப்படையினர் உவர்மலையை ஆக்கிரமித்துப் படையெடுத்தகாலம். உவர்மலையைப் பாதுகாக்கவும், ஆகாயப்படையினர் ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்தவும் தமிழ் மக்களைக் குடியமர்த்தவும் போராடிய காலங்களை நினைவுகூரவே வேண்டும். இப்போராட்டங்களில் மாணவர், இளைஞர்களாய் திருகோணமலையில் குடியேறிய நாமெல்லாம் இணைந்திருந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை சைவத்திருத்தலமாக விளங்கிய காளிகோவில் பக்கத்தில் பாரதி விவசாயக்கழக அலுவலகம் அமைந்திருந்தது. நூற்றுக்கணக்கான பல பிரதேசங்களை சேர்ந்த இளைஞர்கள், உவர்மலையைத் தொடர்ந்து கன்னியா நீரூற்று, கித்துலூற்று (பத்தாம் கட்டை) வேப்பங்குளம் வாலிபர் திட்டம், பன்குளம் குடியேற்றத்திட்டங்களிலும் குடியேறிய காலம். 18 மாதங்களைக் கடந்தும் அப்பிரதேசங்களில் நாம் அங்கேயே காடுகளில் வாழ்ந்த காலத்தை நினைவுகூர்ந்தே ஆகவேண்டும். அண்ணன் சத்தியசீலராசா முதலான தமிழரசுக் கட்சி இளந்தலைவர்களாய் விளங்கிய உவர்மலை விடுவிப்புப் போராட்டக்காரர்களும் நாமும் ஒன்றிணைந்து செயற்பட்டோம். கித்துலூற்று பிரதேசத்தில் போராட்டங்களில் கைதுசெய்யப்பட்டவர்களை காவல்துறை நிலையங்களிலிருந்து விடுவிப்பதற்காக, வழக்கறிஞராயிருந்த திரு.சம்பந்தன் அவர்களை வீடு சென்று சந்திப்பதற்கு சத்தியசீலராசாவும் உதவியாயிருந்தார் என்பதை நினைவுகூருவேன். திருமலைக்கு வரும் காலங்களில் பல சந்தர்ப்பங்களில் சத்தியசீலராசா தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று உணவு தருவார். அவர் மனையாள், பிள்ளைகள், குடும்ப உறவுகள் எங்களை வரவேற்று விருந்தோம்பியிருந்த காலங்களை நினைவுகூர வேண்டும்.

திரு.சத்தியசீலராசா திருமலை நகராண்மைக் கழக ஆளுகையில் அதன் உறுப்பினராக 2011 காலப்பகுதியிலிருந்து 2015 வரை மிக அர்ப்பணிப்புடன் செயலாற்றினார். பொதுத்தேர்தல் காலங்களில் குறிப்பாக 1977ல் திரு.சம்பந்தன் வெற்றிக்காகத் தீவிரமாக உழைத்தார். சத்தியசீலராசா தமிழரசுக் கட்சியின் உவர்மலைக்கிளையின் தலைவராக, திருமலைத் தொகுதி மற்றும் மாவட்டக்கிளைத் தலைவராக, பொருளாளராக பல காலங்களில் சேவையாற்றியவர். அதற்கும் மேலாக கட்சியின் மத்திய குழு உறுப்பினராகவும் தன்னை அர்ப்ணித்து உழைத்தவராவார். தன் வாழ்நாளில் தெய்வ நம்பிக்கையுடன் மக்கள் தொண்டிலும் தமிழ்த் தேசத்தின் விடுதலைக்காகவும் கொள்கைப்பற்றுடன் இலட்சிய தாகத்துடன் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி அர்ப்பணித்திருந்த, தலைமைத்துவப்பண்பு மிக்க ஒருவராக விளங்கிய தியாகம் நிறைந்த மனிதர் சத்தியசீலராசாவை என்றும் நினைவு கூறுவோம்.

**மாவை.சோ.சேனாதிராசா**

**தலைவர்,**

**இலங்கைத் தமிழரசுக் கட்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக சேவையாளனை இழந்து விட்டோம்......

தனக்காக மட்டும் வாழ்க்கை என்பதனை மாற்றியமைத்தே பல்வேறு தளங்களில் நின்று கருமமாற்றியவர் மறைந்த அமரர் சத்தியசீலராஜா அவர்கள் உவர்மலை மக்களால் என்றுமே மறக்க முடியாதவர். இன உணர்வோடு புறப்பட்ட அரசியல் போராளி என்பேன்.

உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியின் வளர்ச்சிப் படிகளில் தனது கால்த்தடங்களைப் பதித்துச் சென்றுள்ளார். நான் உவர்மலை விவேகானந்தாவில் கண்டிருக்கிறேன். நண்பர் அமரர் காளிராஜா அவர்களின் மாமனார் என்பதால் பெருமதிப்புக் கொண்டிருந்தேன். மருமகனின் நினைவாக பாடசாலை முகப்பு வாயிலை அமைத்துக் கொடுத்தவர்.

பிரதேச ஆலயங்களில் தலைவராக இருந்து சைவப்பணி புரிந்த பெருந்தகை தமிழரசிக்கட்சியின் செயற்பாடுகளில் முன்னின்று உழைத்தார். இவருடைய மரணமும் எதிர்பாராமல் நிகழ்ந்து விட்டமை. கவலையே அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு குடும்பத்தார் அனைவருக்கும் ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஓம் சாந்தி
திரு. க. யோகானந்தன்
(ஓய்வு பெற்ற அதிபர்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்கை வழி வாழ்ந்தவர்

பருத்தித்துறையில் பிறந்து பருத்தித்துறை வேலாயுதம் வித்தியாலயத்தில் கல்வி பயின்று வளர்ந்தவர் அமரர் கோ. சத்தியசீலராசா அவர்கள். பாடசாலையில் கல்வி பயின்ற போது அவரைக்கற்பித்த ஆசிரியர்களில் பருத்தித்துறைப் பாராளுமன்ற உறுப்பினராக நீண்டகாலம் சேவையாற்றிய அமரர் க.துரைரத்தினம் அவர்களும் ஒருவர். இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் இலங்கையில் இன வேறுபாடுகள் தலைதூக்கிய காலகட்டத்தில் தமிழ் இன விடுதலைக்காகவும் சுதந்திரத்திற்காகவும் தந்தை செல்வாவினால் ஆரம்பிக்கப்பட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சி குரல் கொடுத்தது.

இதனைப் பாடசாலையில் கற்கும் நாட்களிலேயே தமிழரசு அரசியலின்பால் ஈர்க்கப்பட்டவர் அமரர் சத்தியசீலராசா அவர்கள். அமரர் துரைரத்தினம் அவர்கள் 1956 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட போதும் அதற்குப்பின் வந்த தேர்தல்களிலும் கட்சியினதும் துரைரத்தினம் அவர்களினதும் வெற்றிக்கு முன்நின்று உழைத்தவர். குறிப்பாக வடமராட்சிக் கிழக்குப் பகுதியில் மூத்த உறுப்பினர்கள் ஊரிக்காடு இராமண்ணா, சுப்பர் மடம் குமரகுருசாமி போன்றோருடன் இணைந்து கட்சியின் மேம் பாட்டுக்கு செயல்பட்ட விதத்தை நினைத்துப் பார்க்கிறேன். அந்நாட்களில் பருத்தித்துறையில் Tutory நடத்திய திரு.வேலுப்பிள்ளை அவர்களும் (குல்லா வேலுப்பிள்ளை என அறியப்பட்டவர்) கட்சிப்பணிகளில் ஈடுபட்டிருந்த நாட்களில் அவரோடும் இணைந்து நின்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சியால் முன்னெடுக்கப்பட்ட சிங்கள சிறி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்குபற்றி சிறை சென்றவர் அமரர் சத்தியசீலராசா அவர்கள். அயல் ஊரான வல்வெட்டித்துறையைச் சேர்ந்த எனக்கும் திரு. சத்தியசீலராசா அவர்களுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியூடாகவே தொடர்பு இருந்து வந்தது.

வேலைவாய்ப்பின் நிமித்தம் திருகோணமலை சென்று கப்பல்துறையில் இணைந்து பின் துறைமுக அதிகார சபையில் வேலைபார்க்கலானார். அங்கும் தமிழரசுச் செயல்பாடுகளில் தீவிர கவனம் செலுத்தி வந்தவர் உவர்மலையைத் தன் வசிப்பிடமாக ஆக்கிக் கொண்டார். தேர்தல் காலங்களில் மட்டுமல்லாது கட்சியால் முன்னெடுக்கப்பட்டு வந்த போராட்டங்கள், கட்சி மாநாடுகள் போன்றவற்றிலும் பங்குகொண்டிருந்ததை நான் நினைத்துப் பார்க்கிறேன். தமிழரசுக் கட்சியின் திருகோணமலைச் செயல்பாடுகளில் திருவாளர்கள் வீர சுப்பிரமணியம், ஈழத்துநாதன், சிறிஸ்காந்தராசா போன்றோருடன் இணைந்து செயல்பட்டமையானது தமிழர் தலைநகரமான திருகோணமலையில் தமிழன் பெருமைக்கு மெருகூட்டுவதாக இருந்தது. யுத்த காலத்திலும் சரி அதன் பின்னரும் திருகோணமலையில் அரச பயங்கரவாதங்களுக்கு முகம் கொடுத்து வாழ்ந்த தமிழ் மக்களோடு மக்களாக வாழ்ந்து சேவைகள் பல ஆற்றியவர். மூதூர் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அமரர் அ.தங்கத்துரை அவர்களோடும் பின் திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர் திரு.இரா.சம்பந்தன் அவர்களோடும் நெருங்கிய உறவைப் பேணி கட்சிப் பணியும் பொதுப்பணிகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றியவர். மேலும் திரு. சத்தியசீலராசா அவர்கள் தலைவர் அமிர்தலிங்கம் அவர்களாலும் அறியப்பட்டவராகவும் இருந்தார். அமரர். சத்தியசீலராசா துறைமுக அதிகாரசபையில் உயர்பதவி வகித்திருந்தாலும் நானும் சட்டத்தரணி R.D.இரத்தினசிங்கம் மற்றும் இருவரும் இணைந்து "Victory Shipping Agency" என்ற Sub Agency கம்பனியை ஆரம்பித்து சுமார் 15 ஆண்டுகள் செயல்ப்பட்டோம்.

அக்காலப் பகுதிகளில் நாம் கூட்டாக செயல்பட்ட பல விடயங்களை நினைத்துப் பார்க்கிறேன். அன்றைய கால கட்டங்களில் அவை பெருநன்மையாகவே இருந்தன. திரு. சத்தியசீலராசா அவர் தன் பிற்காலத்தில் திருகோணமலை நகராட்சி மன்ற உறுப்பினராகவும் செயல்பட்டு தன் பொறுப்புகளையும் கடமைகளையும் நிறைவேற்றி வாழ்வில் முழுமை பெற்றவர். அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறேன்.

**சூ.சேவியர் குறைநாயகம்**
**30, மாட்டின் வீதி,**
**நிர்வாகச் செயலாளர்,**
**யாழ்ப்பாணம்.**
**இ.த.அகட்சி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்தர் சி கிளார்க்

ஆர்தர் சி கிளார்க் 1957 -2008 உலகின் தலைசிறந்த அறிபுனை எழுத்தாளராக அறியப்படுபவர். இங்லோத்தில் சமர்செட் என்ற இடத்தில் 16 டிசம்பர் 1917 இல் பிறந்தார் இவரது தந்தை ஒரு விவசாயி. தாம் அஞ்சல் நிலையத்தில் தந்தி அனுப்புனராகப் பணியாற்றினார். மூத்தவரான கிளார்க் அருகில் உள்ள டாண்டன் நகர உயர்நிலைப்புலமைப்பரிசில் பெற்ற மாணவனாகக் கல்வி பயின்றார் பிள்ளை பருவத்தில் பவத்தில் சமர்செட் கடற்கரையோரமாக நடந்து செல்லும் போது தனது அறிவியல் கற்பனைகளை விழித்தெழச் செய்த பல நிகழ்வுகளை நினைவு கூறுவார்.

முதல் உலகப்போரில் படுகாயமடைந்திருந்த தந்தையை தன் 13 வயதில் கிளார்க் இழந்தார். இதன் பின் டான்டூனில் உள்ள ஷாய்ஷ் இலக்கணப் பள்ளியில் சேர்ந்து கல்வி பயின்றார். சிறு வயதிலேயே வானியலில் ஈடுபாடு கொண்ட ஆர்தர் சி.கிளார்க் பழைய அமெரிக்க அறிவியல் புதின நூல்களை படிப்பது வழக்கம் ஆரம்ப கல்வியை முடித்த அவருக்கு தொடர்ந்து பல்கலைக்கழகத்தில் படிக்க குடும்ப வருவாய் போதாமையால் தனது 19வது வயதிலேயே லண்டன் அரசுப் பணியில் சேர்ந்து பணியாற்றினார்.

இவர் தனது 17 ஆம் அகவையிலேயே பிரித்தானியாவில் கோள்களியல் கழகத்தில் சேர்ந்தார். மன்னாளில் இதன் பொருளாளராகவும், தலைவராகவும் பொறுப்பு வகித்தார். அரசுப் பணியில் இவரது கணிதக் கூர்மை கணக்கு வழக்குகளைச் சரிபார்க்கும் பணிக்கு உயர்வித்தது. ஆனால் 1941இல் இரண்டாம் உலகப்போரின் போது அப்பணியிலிருந்து விலகி ரோயல் வான்படையில் இணைந்தார். அங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலத்திரணியலில் பயிற்சி பெற்று வானொலிப் பள்ளியில் செய்முறைப் பயிற்சியாளரானார். இறுதியில் தென்மேற்கு இங்கிலாந்தில் வட காரன் வாலில் உள்ள டேலிட்ஸ்டோமூர் என்ற இடத்தில் அமெரிக்காவின் தரைக் கட்டுப்பாட்டு ராடார் அமைப்புக் குழுவில் பணியாற்றினார். பின்னர் இலங்கையில் குடியேறி தனது எழுத்துக்களையும் ஆய்வுகளையும் புவியிலிருந்து பார்க்கும் பொழுது வானில் ஒரே இடத்தில் இருக்குமாறு செய்மதி செயற்கோள்களை அமைத்து, உலகளாவிய பரப்பில் தொலை தொடர்புக் கருவிகளைப் பயன்படுத்தலாம் என்ற அறிவியல் கருத்தை 1945ல் முன்வைத்தார். இக்கருத்து தான் தற்கால வளர்ச்சிக்கு நினைவாக புவியிடமிருந்து மாறாச் சிற்றுப்பாதைகளை சில நேரங்களில் கிளார்க் வறை என்றும் அழைப்பர்.

இவர் தனது 90வது வயதில் 2008 ஆம் ஆண்டு மார்ச் 19 ஆம் திகதி கொழும்பில் காலமானார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது சக ஊழியர்களுடன்



உவர்மலை சன சமூக நிலையத்தின் பரிசளிப்பு விழாவின் போது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை விவேகானந்தா கல்லூரியின் பரிசளிப்பு விழாவின் போது








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியலில் ஈடுபடும் போது







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனது சேவையிலிருந்து ஓய்வு பெறும் வேளை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலண்டன் Airport இல் தனது மகன் மற்றும் நண்பனுடன்



திருகோணமலை பத்திரகாளியம்மன் ஆலய முன்றலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகர சபை அமர்வின் போது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுவன மேற்பார்வையின் போது






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

கொரோனா என்ற கொடிய நோய் எம் குடும்பத்தின் ஆணிவேரைக் கொண்டு சென்ற இவ் கசப்பான சூழ்நிலையிலும் மரணச் செய்தி கேட்டு வீடு வந்து ஆறுதல் தெரிவித்த உற்றார் உறவினர்களுக்கும் தனிமைப்படுத்தலில் இருந்த போது எமக்கு உதவியவர்களுக்கும் தொலைபேசி மூலமாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமிருந்து அழைப்பினை ஏற்படுத்தி ஆறுதல் கூறியவர்களுக்கும். எம்மோடு கூட இருந்து உதவிகள் பல புரிந்த அணைவருக்கும் எமது நன்றியினை தெரிவிப்பதோடு மேலும் ஐயாவின் நினைவை ஒட்டி அஞ்சலிக் கூட்டத்தினை வவுனியா மற்றும் திருக்கோணமலையில் நடாத்தியவர்களுக்கும் இந் நினைவு மலரை ஆக்குவதற்கு உதவி புரிந்தவர்களுக்கும், தொகுப்புக்களை வழங்கியவர்களுக்கும் எமது நன்றிகளை தெரிவித்து கொள்கின்றோம்.


நன்றி

**என்றும் அன்புடன் குடும்பத்தினர்**
**43, 4வது ஒழுங்கை, உவர்மலை,**
**திருக்கோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைதிருக்கிறாய்?
அது வீணாகுவதற்கு ?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை
மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள்,
அது வேறொருவருடையதாகும்.
இந்த மாற்றம் உலக நியதியாகும்.



இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்
-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-



SSDK017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org